# 24 பக்கங்களில்...

இன்றைய இளம் தலைமுறையினர்களுக்கு நம்முடைய புகழ்பெற்ற கர்நாடக இசை மேதைகளை அறிமுகப்படுத்தும் வகையில் படக் கதைகளின் வாயிலாக மேதைகளின் வரலாற்றைப் புத்தக வடிவில் தருபவர், கர்நாடக இசைப் பாடகியும் வீணை வித்வானுமான லட்சுமி தேவ்நாத்.

ஜி.என். பாலசுப்பிரமணியம், எம்.எஸ். சுப்புலட்சுமி ஆகியோரின் வரலாற்றை கிராஃபிக் நாவலாக எடுத்துவந்து, குழந்தைகளின் பரவலான ஆதரவைப் பெற்றிருக்கும் லட்சுமி தேவ்நாத், சமீபத்தில் வெளியிட்டிருப்பது மதுரை மணி அய்யரின் நூற்றாண்டு விழாவைப் போற்றும் விதத்தில், 'மதுரை மணி அய்யர் - தி ஜாய் ஆஃப் சாங்' என்னும் நூலை!

மதுரை மணி அய்யரின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்வுகளை முக்கியமான தருணங்களை எதிலுமே பதிவாகாத சில தகவல்களையும் இந்த 24 பக்க படக்கதை நூலில் பதிவு செய்திருக்கிறார் லட்சுமி தேவ்நாத். மேதைகளின் வாழ்க்கை என்பது காட்டாறு, அதை கமண்




டலத்தில் அடக்கும் முயற்சியில் வெற்றிபெற்றிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும்.

"ஒன்பது வயது குழந்தையும் இந்தப் புத்தகத்தைப் படித்தால் புரிந்து கொள்ளும் வகையில் இருப்பதுதான் இந்தப் புத்தகத்தின் சிறப்பு. என்னுடைய நோக்கமும் அதுதான்.." என்கிறார் நூலைக் குறித்து லட்சுமி தேவ்நாத்.

அவரின் ஒவ்வொரு படக்கதை நூலுடனும் சம்பந்தப்பட்ட இசை மேதையின் பெரிய படத்தையும் இணைத்துத் தருகிறார். "இது எதற்காக?" என்றால், அவரின் பதில்:

"மேற்கத்திய இசையை ரசிக்கும் ரசிகர்களுக்கு அவர்களின் அபிமான நட்சத்திரங்களின் படங்களை வீட்டில் மாட்டிவைத்துக் கொண்டாடும் வாய்ப்பு இருக்கும் போது, நம்முடைய குழந்தைகளுக்கு மட்டும் கர்நாடக இசையில் சிகரம் தொட்ட உச்ச நட்சத்திரங்களைக் கொண்டாடும் வாய்ப்பை கொடுக்காவிட்டால் எப்படி?" என்கிறார் லட்சுமி தேவ்நாத்.

- திரு